சத்குரு ஜக்கி வாசுதேவ்

# ஆயிரம் ஜன்னல்!

## கடவுள் தேவையே இல்லை!

'கயிலாயம், கங்கை என்று சக்தி வாய்ந்த தலங்கள் இங்கேதானே காணப்படுகின்றன? இந்தியாவின் பூகோள அமைப்பு அதைப் புனிதத் தலமாக்கி இருக்கிறதா? அதனால்தான் புத்தர், ராமகிருஷ்ணர், ரமணர், இன்னும் எண்ணற்ற யோகிகள் என்று வேறு எங்கும் இல்லாத அளவு இந்த தேசத்தில் மட்டும் புனிதர்கள் உதித்தார்களா?' என்று என்னிடம் அவ்வப்போது கேட்கிறார்கள்.

ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள். தலம் புனிதமாக இருந்ததால் புனிதர்கள் உதிக்கவில்லை. புனிதர்கள் இருந்ததால்தான் இந்த தேசம் புனிதத் தலமாகியது. இங்கே மட்டும் இவ்வளவு புனிதர்கள் எப்படி அவதரித்தார்கள்?

வட துருவத்தில் தென்னைகள் வளர வாய்ப்பு உண்டா? ஒரு மரம் வளர்வதற்குத் தேவையான நிலம், சுமுகமான சூழ்நிலை, சரியான தட்பவெப்ப நிலை எல்லாம் தேவை அல்லவா?

அதே போல் மனிதன் மேன்மையுற இந்தக் கலாசாரத்தில் மிகச் சரியான சூழ்நிலைகள் உருவாகி இருந்தன. சதா போர்கள் இருந்தால், வளர்ச்சி எதுவும் இருக்காது. எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, வன்முறை என்று பூமியின் மற்ற பகுதிகள் அமைதி இன்றிக்கிடந்தன. போர்கள் இல்லாத அமைதியான தேசமாக இருந்ததால், பாரதத்தில் ஆன்மிகம் தழைத்தோங்கியது. வெளிச் சூழ்நிலைகள் பயமுறுத்துவதாக இல்லாதபோது, மக்கள் தாமாக உள்நோக்கி வாழ்க்கையின் நுட்பமான பகுதிகளைப் பார்க்கத் துவங்குவர்.

பத்துப் பன்னிரண்டு ஆயிரம் வருடங்களாக அந்த அற்புதமான சூழல் தொடர்ந்து இந்த மண்ணில் இருந்தது. அதனால், மகான்கள் உருவாயினர்.

இதற்குப் பல ஆதாரங்கள் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன. இன்னும் பல ஆதாரங்கள் அண்டைய நாட்டு மண்ணிலும், ஆழ்கடலிலும் புதைந்து கிடக்கின்றன. பூமியின் வேறு எந்தப் பகுதியிலும் இப்படிப்பட்ட சூழல் அமையவில்லை.

அதே போல், வளைந்து கொடுக்காத விறைப்பான மத நியதிகள் ஆன்மிகம் மேலோங்குவதைத் தடுக்கும். நம் கலாசாரத்தில், கருத்துச் சுதந்திரம் பூரணமாக இருந்தது. எந்த நம்பிக்கையும் மற்றவர் மீது திணிக்கப்படவில்லை. கடவுளை நம்புவதும், நம்பாததும், நடுநிலையில் இருப்பதும் அவரவர் விருப்பத்துக்கு விடப்பட்டது. சிந்தனை சிறைப்படாமல் சுதந்திரமாக இயங்கினால்தான் ஆன்மிகத்துக்கு வாய்ப்பு உண்டு.

ஒரே குடும்பத்தில் ஒருவர் ஆண் கடவுளைக் கும்பிடுவார். ஒருவர் பெண் கடவுளைத் துதிப்பார். யானை, நாய், கழுகு, குரங்கு, பாம்பு என்று எதை வேண்டுமானாலும் கும்பிடுவதற்கு இங்கு சுதந்திரம் இருந்தது. ஒருவரேகூட எல்லா வகை உருவங்களையும் கடவுளாக வழிபடுவார். எதுவும் தவறாகப் பார்க்கப்படவில்லை.

மற்ற கலாசாரங்களில் கடவுளுடன் பிணைந்திருப்பதுதான் உன்னதமானது என்று நினைக்கப்படுகிறது. இங்கே கடவுள் என்பது ஒரு பாதை. மேலே அடி எடுத்துவைப்பதற்கு ஒரு படிக்கல். அவ்வளவுதான். இந்த கலாசாரத்தில் கடவுள் என்பதை இறுதி இலக்காக வைத்து யாரும் இயங்கவில்லை. முக்தி என்பதைத்தான் இலக்காக வைத்து இயங்கினார்கள்.

ஒரு யோகி எளிமையான உடைகளில் பாதையோரம் நடந்து சென்றுகொண்டு இருந்தார். அவரைச் சாத்தான் கவனித்தது.

'அந்த யோகியை எப்படி ஏமாற்றுகிறேன், பார்' என்று தன் சகாவிடம் சொன்னது. தன் உருவத்தை ஒரு தேவன் போல் மாற்றிக்கொண்டது. யோகி சென்ற பாதையில் குறுக்கிட்டது.

"யோகியே, உங்களுக்கு உதவுவதற்காக நான் கடவுளால் அனுப்பப்பட்டு இருக்கிறேன்" என்று அது வணங்கி நின்றது.

யோகி புன்னகைத்தார். "வேறு யாரோ என்று நினைத்து நீ என்னிடம் வந்திருக்கிறாய்... என் தேடலில், நான் கடவுளின் உதவியைக் கேட்கவில்லையே" என்று சொல்லிவிட்டு, யோகி நிற்காமல் தொடர்ந்து நடந்தார்.

கடவுளைவிடவும் மிகவும் மதிப்பளிக்கப்பட்டது முக்தி என்ற விடுதலைக்குத்தான். வேறு எந்த ஜனத்தொகையும் இந்த மேன்மையான நோக்கம் பற்றி அறிந்திருக்கக்கூட இல்லை. பல்லாயிரக்கணக்கான வருடங்களாக இந்த கலாசாரம்தான் இறுதி விடுதலையை உன்னதம் என்று அறிந்து செயல்பட்டிருக்கிறது.

வேறு தேசங்களில் சில மத நம்பிக்கைகள், சில சமூக நம்பிக்கைகள் அவற்றை எதிர்த்தவர்களை கொல்லச் சொல்லியது. சாக்ரடீஸ், மன்சூர் போன்றவர்கள் அப்படித்தான் பலி கொடுக்கப்பட்டார்கள். ஆனால், வேறு மதத்தினரைக் கொண்டு வந்து என் கடவுளுக்குத் தலை வணங்கு என்று ஒருபோதும் இங்கே வற்புறுத்தியது இல்லை.

50

### "திருமணம் நல்லதா, கெட்டதா?"

"திருமணம் என்பது இரண்டு பேர் இணைவதோடு நின்றுவிடுவதில்லை. அதனுடன் நிறைய விஷயங்கள் சேர்ந்தே வரும். அவற்றைச் சந்தோஷத்துடன் எதிர்கொள்ளத் தயாராக இருப்பவர்களே அதை நாட வேண்டும். அற்புதமானவர்கள் சேரும்போது திருமணமும் அற்புதமாகிறது. மோசமானவர்கள் சேர்ந்தாலோ, அது மோசமாகிறது. மற்றபடி, திருமணம் நல்லதும் அல்ல, கெட்டதும் அல்ல!"

– சத்குரு ஜக்கி வாசுதேவ்







### சத்குரு குறித்து சுபா...

சத்குரு ஜக்கி வாசுதேவ் அபாரமான குரு. எளிமையான மனிதர். எண்ணுதற்கு அரிய ஞானி. இன்னும் அடுக்குவதற்கு ஆயிரம் அம்சங்கள் உள்ளன. ஆனால், வார்த்தைகளில் அவரைக் குறைவாகவே விளக்க முடியும்.

சத்குருவுடன் எங்களுக்குக் கிடைத்த தொடர்பு இந்தப் பிறவியில் எங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு வரம்.

'அத்தனைக்கும் ஆசைப்படு', 'உனக்காகவே ஒரு ரகசியம்', 'கொஞ்சம் அமுதம், கொஞ்சம் விஷம்' தொடர்களில் பல கோணங்களில் அவருடைய மிக வித்தியாசமான கருத்துக்களைத் தொகுத்து விகடன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளும் அற்புத வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது.

அடுத்து, அவருடைய நேரடி அனுபவங்கள் மூலம் அவர் உணர்ந்ததைப் பகிர்ந்துகொள்ளச் சொல்லிக் கேட்டோம். 'ஆயிரம் ஜன்னல்'களில் சில திறந்தன.



எதைப் பற்றிய அனுபவமாக இருந்தாலும், அதன் ஆணிவேர் வரை ஆழமாக உணர்ந்து அவர் தெளிவாகச் சொன்னபோது, பல புதிய அரிய சேதிகள் நமக்குக் கிடைத்தன.

சத்குரு ஆங்கிலத்தில் வழங்கிய அனுபவங்களை ரசித்து, பல சமயம் பிரமித்து, அவற்றைத் தமிழில் விகடன் வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டோம்.

இந்த அதிர்ஷ்டத்துக்கு விகடனுக்கு நன்றி.

சத்குருவுக்கு நமஸ்காரங்கள்!

அன்புடன்,
சுபா

இப்படி ஒரு சுதந்திரமான கலாசாரம் இங்கு நடைமுறையில் இருந்ததால், ஆன்மிகம் தானாகவே வளர்ச்சியடைந்தது. அதை ஒரு விஞ்ஞானமாக வடிவமைத்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வழங்கும் நிலை உருவானது. எழுத்து வடிவில் அது அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லப்படவில்லை. குரு-சிஷ்ய பாரம்பரியம் என்ற மிக ஆழமான முறை மூலமாக, அனுபவ ரீதியாக அது எந்தவிதச் சிதைவுகளும் இல்லாமல், அடுத்த தலைமுறைகளுக்கு வழங்கப்பட்டது. அதனால் அதன் தூய்மை காக்கப்பட்டது.

இது ஏதோ தற்செயலாக நடந்துவிடவில்லை. வெகு முறையாகப் பராமரிக்கப்பட்டு பின்வரும் தலைமுறைகளுக்கு அது வழங்கப்பட்டது. அதனால், ஆன்மிகம் மலர்ந்தது. வளர்ந்தது. இன்றைக்கு ஆன்மிகத்தின் கட்டுக்கோப்பு வெகுவாகச் சிதைந்துவிட்டபோதிலும், அது இப்போதும் இந்த தேசத்தில் வேலை செய்வதற்குக் காரணம், அதன் வேர்கள் ஆழமாக ஊடுருவி இருப்பதால்தான்.

அப்போலோனியஸ் என்ற கிரேக்கத் தத்துவவாதி பாரதம், எகிப்து போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்தவர். 'எகிப்தில் இருக்கும் கோயில்களின் அமைப்புக்கு இந்திய யோகிகளின் பெரும் பங்கு உண்டு. பாரதத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட சிற்பக் கலைஞர்கள், யானைகள், இவர்களுடைய பணி இதில் மிக முக்கியமானது' என்று சொல்லியிருக்கிறார்.

மேற்கத்திய நாகரிகத்தின் அஸ்திவாரமாகக் கருதப்படும் கிரேக்கக் கலாசாரம்கூட பாரதத்தில் இருந்துதான் அதன் முக்கியமான அம்சங்களைப் பெற்றது என்று ஆதாரபூர்வமாக சரித்திர ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். கடவுள்கள், கோயில் அமைப்புகள், மற்றும் ஆன்மிகத்தில் மேம்பட்ட விஷயங்கள் என்று கருதப்பட்டவை எல்லாமே இங்கிருந்துதான் கிரேக்க தேசத்துக்குச் சென்றுள்ளன.

இன்றைக்கு நம் தேசத்தில் ஒரு கிராமத்தில் விவசாய வேலை செய்பவரிடம்கூட முக்தி, தர்மம் போன்ற வார்த்தைகள் புழக்கத்தில் இருக்கின்றன. சாதாரண கூலி வேலை செய்பவருக்குக்கூட இந்த அடிப்படைகள் புரிந்திருப்பதை நீங்கள் காண முடிகிறது. உலகில் வேறு எந்தப் பகுதியிலும் இந் நிலையைக் காண முடியாது.

மனிதர்கள் மேம்பட்டதனால்தான் அவர்கள் இருந்த தலங்கள் புனிதத் தலங்கள் ஆயின. அப்படித்தான் பாரதம் புனிதத் தலமாகியது. இன்றைக்கு ஆன்மிகத்தின் இழைகள் சிதைந்து போன மோசமான நிலையிலும், அது இன்னமும் உயிரோடு இருக்கிறது. அதை மேலும் சிதைவடையவிடாமல், நம் பூர்வ கலாசாரத்தின் முக்கிய அம்சங்களை இப்போதும் கடைப்பிடித்தால் நமக்கு உள்ளேயும் வெளியேயும் நல்லது!

**- ஜன்னல்கள் திறந்தன**